DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

**SC. No: 37/2022 Deposition of Witness for : P.W.21**

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | பைசல்ஹசன் | Calling | **ஆம்புலன்ஸ் டிரைவர்** |
| Father's Name | : | | Taluk | |
| Age | : | | District | |
| Village | : | | | |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 09-03-2026

**முதல் விசாரணை**

நான் தாராபுரத்தில் குடியிருக்கிறேன். ஆம்புலன்ஸ் டிரைவராக வேலை செய்து வருகிறேன். நான் கடந்த பத்து வருடங்களாக என்னுடைய சொந்த ஆம்புலன்ஸ் டிரைவராக வேலை செய்கிறேன். என்னுடைய ஆம்புலன்ஸின் பதிவு எண் TN 55 Q 9765 ஆகும். 16.10.2021 ஆம் தேதி மாலை சுமார் 6.45 –லிருந்து 7:00 மணிக்கு நான் தாராபுரத்தில் அரசு மருத்துவமனையில் இருந்தபோது குமரேசன் என்பவர் என்னை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்ததாகவும் 108 ஆம்புலன்ஸ் வருவதற்கு லேட் ஆகும் என்பதால் கோயம்புத்தூர் செல்வதற்காக ஆம்புலன்ஸ் வேண்டும் என்றும் என்னிடம் கேட்டார். தன்னுடைய மைத்துனரை யாரோ குத்தி விட்டதாகவும் கோயம்புத்தூர் செல்ல வேண்டும் என்றும் என்னிடம் சொன்னார். நான் கோயம்புத்தூர் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். சுப்பிரமணி என்பவரை நான் கூட்டிச் சென்றேன். அங்கு 8.15 அல்லது 8.30 மணிக்கு போய் சேர்ந்தேன் நடுவில் எங்கும் நிறுத்தவில்லை. ஒரு வாரம் கழித்து சார்பு ஆய்வாளர் என அழைத்து

ஆம்புலன்ஸ் போனதா என்று என்னிடம் கேட்டார் நான் போனேன் என்று சொன்னேன்.

**<u>எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.</u>**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2026.03.10 17:25:09 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.